# சிறுபான்மைத்தமிழரின் 100 பிள்ளைகளுக்கு கல்வி வசதி


Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 77

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் லேக சித்திரை 16 முஹறம் 29 ஞாயிற்றுக்கிழமை (28-4-68)


## பிக்குகள் முயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியிலுள்ள சிறுபான்மை தமிழரின் 100 பிள்ளைகளுக்கு கொழும்பில் கல்வி வசதியளிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக, காலியைச் சேர்ந்த அமரவன்ச தேரோ, பத்தேகமவை சேர்ந்த கணேகம சருணரத்தின நாயக்கதேரோ, நந்தராம நாயக்கதேரோ ஆகியோர் இம் மாதம் 30 ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு தெரிவை நடத்துவார்கள்.

கல்வி வசதி பெறுவதற்காக, சங்கானை, அச்சுவேலி, கொடிகாமம், ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 250 சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் விண்ணப்பம் செய்துள்ளனர். இவர்களில் 100பிள்ளைகள் தெரிவுசெய்யப்படுவர்.

அன்று மாலை பிக்குகள் கோஷ்டி, கலவரம் நடந்த பகுதிகளுக்கும் விஜயம் செய்து, சமாதானமாக இருக்கும்படி கேட்டுக் கொள்வார்கள். (நல். நி.)

## திருக்குறள் மகாநாடு

சுழிபுரம், சனி

அகில இலங்கை தமிழ் மறைக் கழகத்தினரின் 16 வது திருக்குறள் மகாநாடு எதிர் வரும்ஜூன்மாதம்9-ம் 10-ம் திகதிகளில் அட்டன் இந்து மகாசபைமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் தமிழ்மறைக் கழகத்தினர் கவனித்துவருகின்றனர்.

# அரசாங்கத்திலிருந்து காங்கிரஸ்வெளியேருது

## உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம் விளக்கம்

## வவனியா எம்.பி.யின் கருத்து அவரதுசொந்தக்கருத்து என்கிருர்

— நமது நிருபர் ஜே. ஜெயக்குமார் —

உடுப்பிட்டி, ஞாயிறு

**"தேசியஅரசாங்கத்திலிருந்து தற்போதையநிலையில் தமிழ்க்காங்கிரஸ் வெளியேறமாட்டாது. தேசியஅரசாங்கத்திலிருந்து தமிழ்க்காங்கிரஸ் வெளியேறிவிடும் என வவனியா எம். பி. கூறியிருப்பது அவரின் சொந்தக் கருத்தேயாகும். இதுசம்பந்தமாகக் கட்சி ரீதியாக எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை."**

இவ்வாறு உபசபாநாயகரும், தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் தமது நிருபருக்களித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

உடுப்பிட்டி எம். பி. மேலும் கூறியதாவது:

அடையாள அட்டை மசோதா சம்பந்தமாகவே நாம் முன்னர் தேசியஅரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்தோம் ஏனெனில் முன்னர் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டை மசோதா தமிழினத்தைப் பாதிக்கக்கூடியதாக இருந்தமையினலேயே அம் மசோதாவிற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து அம் மசோதாவில் திருத்தங்கள்செய்த பின்னரே சபையில் சமர்ப்பிக்கவேண்டுமென்று கோரினேம்.

எமது வேண்டுகோளை ஏற்ற பிரதமர் அடையாள அட்டைமசோதாவில் இரு முக்கிய திருத்தங்களைச் செய்யச் சம்மதித்துள்ளார். முன்பு தயாரிக்கப்பட்ட அடையாள அட்டை மசோதாவில் மாவட்டரீதியிலேயே அடையாள அட்டைகள் வழங்குவதற்கு உத்தேசிக்கப் பட்டிருந்தது. இம்முறை செயல்படின் வடபகுதி மக்களே பாதிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'கலவரத்தை தூண்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்'

### பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கொடிகாமப்பகுதியில் இனிமேல் கலவரத்தைத் தூண்டுவோர் எச்சமூகத்தைச்சேர்ந்தவராக இருந்தாலும் சரி கடுமையான நடவடிக்கை எடுப்போம். துப்பாக்கிச் சூட்டினலோ, வாள்வெட்டினலோ பிரச்னைகளை தீர்க்க முடியாது. சமாதான முறையில்தான் தீர்வுகாணலாம். அதற்காகத்தான் இச்சமாதானசபை நிறுவப்படுகிறது."

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடந்த சமாதான மகாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் அதிபர் மேலும் கூறியதாவது: சங்கானைப் பகுதியில் பெப்ரவரிக்குப்பின் கலவர சம்பவங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. இதை நான்வரவேற்கிறேன். ஆனல் கொடிகாமப்பகுதியிலிருந்து தினமும் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. லைசென்ஸ் இல்லாத துப்பாக்கிகள் இருப்பதாக பெட்டிசங்கள் வந்திருக்கின்றன. கொடிகாமத்தில் இரு கொலைகளும், துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களும் நடந்திருக்கிறது. இரு சமூகத்தவரும், தங்கள் தொழிலுக்குப்போகப் பயப்படுகிருர்கள். வீட்டில்கூட நிம்மதியோடு இருக்கமுடியாது அஞ்சுகிருர்கள். இந்த நிலைமை மாறி சமாதானம் ஏற்படவேண்டும். முதலில் அப்பகுதிகளில் அமைதி நிலவ இரு சமூகத்தவரும், ஒத்துழைக்கவேண்டும்.

இனிமேலும் கலவர சம்பவங்கள் நடந்தால், இரு சமூக தலைவர்களுந்தான் அதற்குப் பொறுப்பாளிகள்

[6-ம் பக்கம் பார்க்க]

## இந்திய மத்திய எ.்.கு மந்திரி டாக்டர் சென்ன ரெட்டி ராஜினமா

### ஆந்திர உயர்நீதிமன்ற தீர்ப்பின் எதிரொலி

புதுடில்லி, ஏப். 27

ஆந்திர உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து இந்திய மத்திய எஃகு மந்திரி டாக்டர் சென்ன ரெட்டி தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்ய முன்வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

டாக்டர் சென்ன ரெட்டியின் ஆந்திர ராஜ்ய சபை அங்கத்துவம் செல்லுபடியாகாது என்ற ஆந்திர உயர் நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து அவர் தமது மந்திரிப் பதவியை ராஜினமாச் செய்ய முன்வந்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து டாக்டர் சென்ன ரெட்டி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யத் தீர்மானித்துள்ளார்.

## வாஷிங்டன் கல்லறைக்கு அண்ணுதுரை விஜயம்

வாஷிங்டன், ஏப். 27

தமிழக முதன் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை இன்று அமெரிக்காவில் தமது வாஷிங்டன் நகர் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பித்தார்.

அமெரிக்காவின் முதலாவது ஜனதிபதியான வாஷிங்டன் பிறந்த இடத்தையும், அவர் அடக்கம்செய்யப்பட்ட இடத்தையும் திரு. அண்ணுதுரை போய்ப்பார்த்தார்.

அண்மையில் காலமான ஜனதிபதி கென்னடியின் கல்லறைக்கும் அண்ணுதுரை போகவிருக்கிருர். உலக சங்கீத விற்பன்னர் ஒருவரால் அளிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றின் போது தமிழிசை நிகழ்ச்சி ஒன்றையும் திரு. அண்ணுதுரை கேட்டு மகிழ்ந்தார். தமிழ் நாட்டவர்களால் தயாரிக்கப்பட்ட தமிழ் உணவுகளையும் அவர் அருந்திஞர்.

உலகத் தமிழ் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட திரைப்படம் உபசாரத்தின் போது காட்டப்பட்டது. டிருனிட்டி கல்லூரி அதிபரின் பாரியாரை திரு. அண்ணுதுரை சந்தித்த போது இந்தப்படம் காட்டப்பட்டது தமிழ்மக்களின் பண்பாட்டையும் சரித்திர வரலாற்றையும் விளக்குவதாக இப்படம் இருக்கின்றதென அமெரிக்கர்கள் சிலர் கூறிஞர்கள். ஏற்கனவே யேல் பல்கலைகழகத்திலும் இப்படம் காட்டப்பட்டது. பிறகு வாஷிங்டனிலும் இப்படம் காட்டப்படும். திரு. அண்ணுதுரை இப்படத்தை தம்முடன் கொண்டுசென்றுள்ளார்.


சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

துன்பம் ஏற்படுகையில் நம் தெய்வ நம்பிக்கை தளருகின்றது. கடவுள் நம்மைக் கைவிட்டு விட்டதாக உணருகிறோம். கலையும் திகைப்புமடைகிறோம். ஆனால் நாம் அவரையே நம்பிவிட்டால், அவர் நம்மைக் கைவிடவே மாட்டார். சந்தேகமே இல்லை. தாயைக் காட்டிலும் பரிவுள்ளவர்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD Jaffna
Post Box: 41 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் சித்திரைமாதம் 16ந் திகதி
(28-4-68)

## பதவிதுறக்க வேண்டுமா?

ஆள் பதிவு (அடையாள அட்டைகள்) மசோதாவை எதிர்க்கும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி. நவரத்தினம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிவிட்டார் என்பதால் அவரை தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றி கட்சியின் பொதுக் குழு தீர்மானம் நிறைவேற்றியது. கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி திரு. நவரத்தினம் தமது எம். பி. பதவியையும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று பொதுக் குழு தீர்மானம் மூலம் கேட்டிருந்தது பொதுக் குழுவின் தீர்மானங்கள் பற்றி திரு. நவரத்தினம் விடுத்த ஓர் அறிக்கையில் எம் பி. பதவியைத் துறக்க வேண்டுமென்பதற்கு எதுவித காரணமுமிருப்பதாகத் தமக்குத் தெரியவில்லையென அவர் தெரிவித்திருக்கிறார். திரு. நவரத்தினம் எம். பி. பதவியைத் துறக்க வேண்டியது அவசியம் தானா?

ஆள்பதிவு (அடையாள அட்டைகள்) மசோதா தமிழ் பேசும் மக்களை மிக மோசமாகப் பாதிக்கச் செய்யுமென்றும் தமிழ் பேசும் மக்கள் பல தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடுமென்றும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி ஜனப் பிரதிநிதிகள் சபையிலே பேச விளக்கிக் கூறிவிட்டு மசோதாவை தாம் எதிர்த்தே வாக்களிக்கப் போவதாக அறிவித்தார். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஓர் அரசியல் கட்சியான தமிழ் அரசுக்கட்சியின் ஓர் அங்கத்தவரான ஊர்காவற்றுறைப் பிரதிநிதி அரசாங்கம் கொண்டு வந்துள்ள ஒரு மசோதாவை எதிர்ப்பது ஆளும் கட்சியின் கட்டுப்பாடுகளை மட்டுமல்லாது அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க ஒப்புக்கொண்ட தமிழரசுக் கட்சியின் ஒழுங்கு கட்டுப்பாடுகளையும் மீறிவிட்டதாக தமிழரசுக் கட்சியின் பொதுக் குழு கருதுகிறது. கட்சி எந்த முறையில் அதன் கட்டுப்பாட்டை மீறியதாக பொதுக்குழு தெரிவித்து அவர் மீது நடவடிக்கை எடுத்தது. அந்தக் கட்சியைப் பொறுத்தவரையில் சரியானதே. ஆனால் இலங்கை அரசியலில் ஓர் அரசியல் கட்சியின் கட்டுப்பாட்டை மீறுவதும் கட்சி விட்டுக் கட்சி மாறுவதும் புதிய விஷயங்களல்ல. இப்படி கட்சியிலிருந்து விலகியவர்கள், விலக்கப்பட்டவர்கள் தங்கள் எம். பி. பதவிகளைத் துறந்த வரலாறும் இல்லை.

அடையாள அட்டை மசோதா சம்பந்தமாக தமிழ் பேசும் பிரதிநிதிகள் தலைவர்கள், பொது மக்கள் மத்தியில் அச்சமும் ஐயமும் நிலவியது உண்மையே. தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கக் கூடிய அம்சங்களை மசோதாவிலிருந்து நீக்குவதற்குப் பிரதமர் சம்மதமளித்திருப்பதால் திருத்த மசோதா தமிழ்பேசும் மக்களைப் பாதிக்காது என்று மற்றவர்கள் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறார்கள். ஆனால் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி இதை நம்பவில்லை. இந்த மசோதாவின் அடிப்படை நோக்கம் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதாகையால் அடையாள அட்டைகள் வழங்கப்படுவதற்குமுன் ஒவ்வொருவரும் தாங்கள் இலங்கைக்கு சட்டவிரோதமாக குடியேறவில்லை யென்பதை நிரூபித்தேயாக வேண்டுமென்றும் இது சுலபமான விஷயமல்லவென்றும் கூறுகிறார். அவர் சொல்வதிலும் நியாயமில்லையென்று கூற முடியாது. இதற்கு முன்னர் இயற்றப்பட்ட சட்டங்களும் அவற்றை அமுல் நடத்துவதில் நிர்வாகரீதியில் பலசங்கடங்களும் தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்படாமலில்லை. இந்த மசோதாவிலுள்ள குறைகள், அதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பற்றி திரு. நவரத்தினம் சுதந்திரமாக இனி தமது கருத்தை பார்லிமெண்டில் எடுத்துச்சொல்ல முடியும். அவர் கூறுவதிலுள்ள நியாயங்களை ஆளும் கட்சியிலுள்ள தமிழ்க்கட்சிகளும் பிரதிநிதிகளும் பிரதமருக்கும் இதர அமைச்சர்களுக்கும் எடுத்துக்காட்டி குறைகளைநீக்க ஒரு வாய்ப்பு ஏற்படும் எனவே திரு. நவரத்தினம் எம். பி. பதவியைத் துறக்காமலிருப்பது அவரை வைத்து நியாயம் பெறுவதற்குக் கிடைக்கக் கூடிய நல்ல சந்தர்ப்பம்.

---

**பேராதனைப்பல்கலைக்கழக முருகன் நாளை திருவுலா**

# திருமுருகன் பவனிவருகிறான்

**(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)**

ஓங்காரமூர்த்தியை முன்னிட்டுக்கொண்டு

இச்சையும் கிரியையும் இரு சக்திகளாய் இருபக்கத்திலும்மேவ, ஞானசக்தியாகியவேற்படையைத்தாங்கி, முத்துக்குமாரசுவாமி என்ற திருநாமந்தரித்து, திருமுருகன் பவனி வருகின்றான்.

கண்ணொளியைச்சூரியஒளி விருத்தி செய்வதுபோல, அவனது அறிவிச்சை செயல்களே ஆன்மாக்களின் அறிவிச்சை செயல்களை விருத்தி செய்து முத்திநெறிப்படுத்துவன. 'இன்னசை வாய்ப்ப இன்னே பெறுதிநீ முன்னிய வினையே' என்றது திருமுருகு.

ஒருநாள் மாவை முருகன் பய்மாமீது, வீதியிற் பவனி வந்தபோது, முத்துக்குமார கவிராஜசேகரரின் கவிதைத் திருவாயிலிருந்து,

'முடிவிலாதுறை
சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக்
கொக்குவில் மீதுவந்
தடையவோர்பெண்
கொடிகாமத் தாளசைத்
தானைக் கோட்டை
வெளிகட்டுடைவிட்டாள்
உடுவிலான்வரப்

பன்னாலை யான்மிக
உருத்த னல்கடம்
புற்றமல் லாகத்துத்
தடைவிடாதனை
யென்று பலாலிகண்
சார வந்தன
ளோரிள வாலையே'.

என்ற அமரகவிதை எழுந்தது. இன்று அக் கவிராயர் இருந்தால், 'முத்துக்குமார சுவாமி உலாப்பிரபந்தம்' ஒன்று உதித்துத் தமிழ்வழங்கும் நிலமெங்கும் உயிர் பெற்று உலாவரும். இது நவயுகக் கவிகளுக்கு எட்டாத கொம்பர்.

சோழராசன் புதல்வியாகிய மாருதப்பிரவல்லி என்பவள் நகுலமுனிவர் அருள் பெற்று மாமுகநோய்நீங்கி, மாவிட்டபுரக் கோயிலை அமைத்தாள். அக்காலத்தில் கதிர்காமத்திலிருந்து அரசுசெய்த உக்கிரராஜசிங்கன் நகுல தீர்த்தத்துக்கு வந்தவன், மாருதப்புரவல்லியைக் கண்டு, அவளைக் காதலித்து மணஞ்செய்தான். அவள் வயிற்றிற் பிறந்தவன், வாலசிங்கன் என்னும் நரசிங்கன். இவன் கண்டியிலிருந்து அரசுசெய்தவன். இவனை வீரராகவன் என்னும் யாழ்ப்பாடி, புகழ்ந்துபாடி, யாழ்ப்பாணத்தை இவனிடம் பரிசிலாகப் பெற்று ஆண்டவன் இவன் அந்தகன் அல்லன். அந்தகக் கவி வீரராகவன் என்ற கவிஞன் வேறு; இவன் வேறு. இவன் அரசு செய்தற்குரியவன். கந்தப்புராணம் பாடிய கச்சியப்பரோடு உடன் கற்றவன்; சகபாடி.

இந்தச் சரித்திரத்தை நோக்கும்போது மாருதப்பிரவல்லி அமைத்த மாவிட்டபுரக் கோயிலிலிருந்து, அவள் மகனும் யாழ்ப்பாடிக்கு யாழ்ப்பாணத்தைக் கொடுத்தவனுமாகிய வாலசிங்கன் ஆண்ட கண்டி நகருக்கு முத்துக்குமாரசுவாமி எழுந்தருளி, அங்கேயன்மலையடுக்கமத்தியில், கலைக்களஞ்சியமாகிய பல்கலைக்கழகம் கைதொழுது கண்டுகளிக்க, இந்துமாணவ மன்றத்தாலமைக்கப்பட்ட கலைச்செல்வமாகிய திருக்கோயிலில் எழுந்தருளியாய் அமைவதன் பொருத்தம் உன்னுந்தோறும் உன்னுந்தோறும் தெவிட்டாது தித்திப்பதாம்.

முருகன் 'நூலறிபுலவன்'; தமிழ்ச்சங்கத்தலைவன், சிவகுரு.

விஞ்ஞானத்துறையும் கணிதத்துறையும் விரிந்து பரந்து, மக்களை மாக்களாக்கி, மண்ணோடு மண்ணாக முனைகின்ற இந்தச் சமயத்தில், மக்களை வானுறையுந் தெய்வத்துள்வைக்கும்வகையில், இந்து மாணவர் மன்றம் எடுத்த முயற்சி யாரா

(6-ம் பக்கம் பார்க்க)

### வாழ்த்துரை

முருகன் தமிழர் கண்ட கடவுள்; உலகம் கண்ட முதற் கடவுள். இம்முருகனுக்குக் கோவில் எடுத்து விழாவயரும் ஊக்கம் மிக்க உங்கள் முயற்சி ஓங்குக.

கா. பொ. இரத்தினம்.
எம். பி. கிளிநொச்சி.

# உபசபாநாயகர் வாழ்த்துகிறார்

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

குன்றுடைய குமரனருள் நின்றிட வேண்டும்.

மாணவர்களிடையே சமய பக்தி இல்லை. அவர்களுடைய ஊதாரித்தனம் அதிகரித்து வருகின்றது அவர்களைப்பொறுத்தவரையில் சைவசமயமும் அதன்கலாசாரமும் அழிந்துகொண்டு செல்கின்றது என்ற ஒரு பொதுவான தப்பபிப்பிராயம் மக்களிடையே பரவிவரும் காலம்இது. இவ்வபிப்பிராசம் தப்பானது. இவர்களாலும் சமயம் வளர்கின்றது. வருங்கால சமய வளர்ச்சிக்கு இவர்களே அடிகோலுவர் என்னும் வகையில் பல மாணவர் சங்கங்களும் மாணவர் இயக்கங்களும் இயங்கிவருகின்றன

இவ்வாறு இயங்கிவரும் சங்கங்களின்பேராதனைப்பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் எமதுகவனத்தை முற்றாகத் தன்பக்கம் ஈர்த்துள்ளது. மாணவர் சங்கமாக அமைந்தபோதும், சமயத்துக்காக இச்சங்கம் ஆற்றிவரும் அளப்பரிய தொண்டுகளைப் பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன, பலரும் பேசுகின்றனர். பல வீடங்களில் இவர்களுடைய [illegible] மூலம் நானும் நன்கறிவேன்' பல்கலைக்கழக வளவினுள் இவர்களின் ஆக்க முயற்சியால் அமைக்கப்பட்டு வரும் குமரன் கோவிலே இவர்களது சேவைக்குச் சான்று பகரும். மிகக் குறுகிய காலத்துள் அழகன் முருகனுக்கு ஆலயம் ஒன்று முற்றுப்பெறும் தறுவாயை அடைந்துவிட்டது. ஊக்கமுடன் உழைத்துவரும் இம்மாணவர்கள் தங்கள் கோவிலுக்கான விக்கிரகங்களை மாவிட்டபுரத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லவிருக்கின்றனர். சித்திரைமாதம் 29-ந் திகதி புறப்பட்டு வைகாசி மாதம் 3-ந் திகதி கண்டியைச்சென்றடையும்இவ்வூர்வலம் சிறப்பாய் அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வேளை பேராதப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத்துக்கு எனது நல்லாசிகளை நல்குவதோடு அவர்களது சமயப்பணி ஓங்கி வளர்ந்திட ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு சைவஅன்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

மு. சிவசிதம்பரம்
உபசபாநாயகரும்,
உடுப்பிட்டித் தொகுதி
பாராளுமன்ற உறுப்பினரும்

---

# ஐயாறன் எழுதுவது

அமெரிக்கப் பல்கலைக் கழகத்திலே தமிழக முதல் அமைச்சர் அண்ணாதுரை திருக்குறள் வகுப்பு நடத்தியதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. பலே பலே!

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடினார் பாரதியார். வள்ளுவனை அமெரிக்கருக்கு அளிக்கும் அண்ணா உலகுக்கே ஒரு நன்மை செய்கின்றார் குறள் காட்டும் வழியிலே உலகில் தலைசிறந்த வல்லரசாகத் திகழும் அமெரிக்கா நடப்பதாயின் அது அந்நாட்டுக்கு மட்டுமன்றி உலகுக்கே பெரும் நன்மையாகுமல்லவா!

ஃ ஃ

அண்ணா அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றபோது, அவர்மீது பலருக்குப் பல சந்தேகங்கள் இருந்தன. தமிழகத்தைத் தனி நாடாக்க அவர் அமெரிக்காவின் உதவியை நாடுவாரென்றும், தலைமை அரசாங்கத்தைத் தூற்றுவாரென்றும் பலர் அஞ்சினர்.

ஆனால் அமெரிக்காவிலே அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலும், வேறு இடங்களிலும் தெரிவித்த கருத்துக்கள், இந்தியாவின் ஒற்றுமையையும், மதிப்பையும் உலகில் ஓங்குவிப்பதாக உள்ளன.

சிறப்பாக, மொழி முதலிய கருத்து வேற்றுமையான பிரச்னைகளை 25 வருடங்களுக்காவது ஒத்தி வைத்துவிடவேண்டுமென்று அவர் கூறியுள்ள நல்ல யோசனை, நம் இலங்கைக்கும் எவ்வளவோ பயன்படும். ஆக்க வழிகளில் பூரண கவனத்தையும் எல்லாரும் செலுத்தலாம்.

ஆனால் அரசியல்வாதிகளின் செவிகளில் இது ஏறுமா! பிரச்னைகள் இல்லாவிட்டால், அவர்கள் எவ்விதம் வாழமுடியும்?

ஃ ஃ

சிங்கப்பூரில் நடைபெற்ற தைப்பூசத் திருவிழாவைப் பற்றிய அழகான படங்களும், கட்டுரையும் "பிளேர்லிட் ஹெரைஸன்ஸ்" என்ற சஞ்சிகையில் வெளியாகியுள்ளன.

முருகன் விக்கிரகம், அலகுகள் குத்திக்கொண்டு எடுக்கும் காவடிகள், திருவிழா பார்க்க விதவிதமான உடை அணிந்துகொண்டு வந்த பெண்கள், குழந்தைகள் இவர்களுடைய படங்களை பார்த்தேன்.

ஆனால், எட்டி சான் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில், ஸ்கந்த என்பது அலெக்ஸாந்தராக இருக்குமென்றும், கிரேக்க வீரர் இந்தியாவுக்கு உள்ளும் வந்து வெற்றிபெற்றதாயும் எழுதியுள்ளதைக் கண்டதும், முருக பக்தர்களின் மனம் புண்படும். நல்லதோர் கட்டுரையை இந்த ஒரு வசனம் கெடுத்துவிட்டதைக் காண மிக வருத்தமாக இருந்தது

ஸ்கந்தன் அல்லது முருகன் அலெக்ஸாந்தராயின், இந்தியாவிலிருந்த புருஷோத்தமன் என்ற மன்னன் தான் சூரபதுமனா? இந்தியாமீதுபடையெடுத்து வந்த ஒரு வெளிநாட்டானையா தமிழர்கள் தங்கள் கடவுளாகக் கும்பிடுகிறார்கள்? இப்படிக் கூறுவது தமிழரை, இந்துக்களை அவமதிப்பதாகும்.

இந்த மாதிரியான அபத்தங்களை "ஆராய்ச்சி" என்று கூறி வெளியிடுவது நன்மையைவிடத் தீமையையே பயப்பதாகும்.

ஆனால், இங்கு நம் பக

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. வில் அணு ஆயுத பரவல் தடை

# ஒப்பந்தம் மீது விவாதம்

## விரைவில் அங்கீகரிக்குமாறு ரஷ்ய, அமெரிக்க வேண்டுகோள்

நியூயோர்க், ஏப்ரல் 27

**அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம், ஐ. நா. பொதுச்சபையின் பிரதான அரசியல் கமிட்டியின் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுள்ளது.**

**நேற்று கமிட்டிக்கூட்டத்தில் பேசிய ரஷ்ய, அமெரிக்கப் பிரதிநிதிகள் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் மீது ஐ. நா. அங்கத்தவர்கள் விரைவில் கைச்சாத்திடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.**

அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பேர்க் பேசுகையில், சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான சுமுக சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு, இந்த ஒப்பந்தம் உதவுவதாகக் குறிப்பிட்டார். ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடாது மேலும் தாமதம் செய்வது பிரச்னைகளைத் தீர்ப்பதைக் கஷ்டமான காரியமாக்கிவிடுமென அவர் எச்சரித்தார்.

அணுஆயுத பரவல்தடை ஒப்மந்தம் சர்வதேச அமைதிக்கு வழிகோலுமென்று ரஷ்யப் பிரதிநிதி வலியுறுத்தினர். ஒப்பந்தத்தை அங்கீகரிக்குமாறு அவரும் ஐ.நா. அங்கத்தவர்களிடம்வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்க, ரஷ்யப் பிரதிநிதிகள் விடுத்துள்ள வேண்டுகோளை ஐ. நா. பொதுக் காரியதரிசி யூதாண்டும் எதிரொலித்தார்.

### ஆட்சேபம்

ரஷ்யாவும், அமெரிக்காவும் இணைந்து தயாரித்துள்ள இந்த அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தத்துக்கு இந்தியா, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ருமேனியா ஆகிய சில நாடுகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

ஐ. நா. பிரதான அரசியல் கமிட்டி செவ்வாய்க் கிழமைவரை, தனது கூட்டத்தை ஒத்திப்போட்டுள்ளது.

நெவாடாவில்

## மிகப் பெரிய அணுகுண்டை அமெரிக்கா வெடித்தது

வாஷிங்டன், ஏப்ரல் 27

அணு ஆயுத பரவல்தடை ஒப்பந்தம ஐ. நா. பிரதான அரசியல் கமிட்டியில் விவாதிக்கப்பட்ட அதே நேரத்தில் நேற்று நெவாடாவில் அமெரிக்கா, நிலத்துக்கடியில் தனது மிகப்பெரிய அணு குண்டுச் சோதனையை நடத்தியுள்ளது.

இந்தக்குண்டு, ஜப்பானிய நகரான ஹிரோஷிமாவில் 2வது உலகயுத்தத்தின்போது போடப்பட்ட குண்டைவிட 60 தடைவை அதிக சக்தி வாய்ந்ததாகக் கூறப்படுகிறது.

நெவாடாவில் பரிசோதிக்கப்பட்ட குண்டு, பரீட்சார்த்த ஹைட்ரொஜன் குண்டாகும். இக்குண்டு, 10 லட்சம் தொன் டி.டி. சக்தி வாய்ந்ததாகும்.

இக்குண்டு வெடித்த போது ஏறத்தாழ 300 மைல் தொலைவிலுள்ள லாவேகாஸ் நகரைக்குலுக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 500 மைல்தூரத்திலுள்ள லொஸ் அஞ்சலஸிலும் அதிர்ச்சி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அமெரிக்க ஜனதிபதிக்கான அபேட்சகர் தெரிவு

### ஜனநாயகக் கட்சி சார்பில் உப ஜனதிபதி ஹம்ப்ரியும்

வாஷிங்டன், ஏப்ரல் 27

அமெரிக்க உப ஜனதிபதி திரு. ஹியூபேட் ஹம்ப்ரி, ஜனநாயகக் கட்சி சார்பாக எதிர்வரும் அமெரிக்க ஜனதிபதித் தேர்தலில் அபேட்சகராக நிற்பது பற்றி இன்று தமது முடிவை அறிவிக்க இருக்கிருர். பெரும்பாலும் அவர் அபேட்சகர் போட்டியில் கலந்து கொள்வாரெனவே தெரிகிறது.

ஜனதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடத் தமது பெயர்களை அறிவித்துள்ள மற்ற இரு ஜனநாயகக் கட்சி அபேட்சகர்கள் செனேட்டர்கள் ரெபேட் எவ். கென்னடியும், மக்கார்த்தியுமாவர்.

இவர்கள் இருவரும், ஜனதிபதி ஜோன்சன் நிர்வாகத்தின் கொள்கைகளைக் கண்டித்துக் கருத்து வெளியிட்டவர்களாவர். ஆகவே ஜோன்சனுக்கு ஆதரவாக ஜனநாயகக் கட்சி அபேட்சகர் தெரிவில் போட்டியிடவிருக்கும் முதலாவது நபர் திரு. ஹம்ப்ரியேயாவர்.

அபேட்சகர் தெரிவு பற்றி ஜனதிபதி ஜோன்சன் தமது கருத்து எதையும் இதுவரை வெளியிட வில்லையாயினும், அவர் தமது ஆதரவை, உப ஜனதிபதி திரு. ஹம்ப்ரிக்கே அளிப்பாரெனப் பொதுவாக நம்பப்படுகிறது.

## ஜோர்தானுக்கு இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி எச்சரிக்கை

டெல் அவிவ், ஏப். 27

இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி, திரு. மொய்ஷே டயான், அரபு கொரில்லா இயக்கத்துக்கு ஜோர்தான் தொடர்ந்து உதவியளித்து ஊக்கப்படுத்திஞல், பலத்த விளைவுகளை அது தாங்க வேண்டியிருக்குமெனஜோர்தானை எச்சரித்துள்ளார்.

அரபு கொரில்லாக்களுக்கு ஆதரவு அளிக்கும் கொள்கையை ஜோர்தான் கைவிடாத பட்சத்தில், ஜோர்தான் பள்ளத்தாக்கு, ஒரு பெரிய போர்க்களமாக மாறும் என்றும் டயான் எச்சரித்தார்.

### இருதடவை சுட்டன

அம்மானிலிருந்து வரும் செய்திகள், கலிலிக் கடலுக்குத் தெற்கே, இஸ்ரேல் துருப்புக்கள் ஜோர்தான் துருப்புகள் மீது. நேற்று இரு தடவை சுட்டதாகத் தெரிவிக்கின்றன. எவ்வித ஆட்சேபமும் ஏற்படவில்லை எனத் தெரிகிறது.

## ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட எப்பகுதியிலிருந்து வரும் நெருக்குதலையும் இந்தியா எதிர்க்கும் என்கிருர் இந்திரா

ரேவாரி, ஏப்ரல் 27

அணு ஆயுத பரவல்தடை ஒப்பந்தம்மீது கைச்சாத்திடுமாறு, எந்தப்பகுதியிலிருந்து வரும் நெருக்கடிகளையும் இந்தியா எதிர்க்கும் என இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி, நேற்று இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் வலியுறுத்திஞர்.

சில வெளிநாடுகள், இந்தியாவுக்குத்தாம் அளித்து வரும் உதவியை நிறுத்துவதுடப்ப பல நெருக்குதல்களை இந்தியாமீது பிரயோகிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்ட பிரதமர் இந்திரா வெளிநாட்டுதவிக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டால், அந்த உதவி இல்லாமலே நாடு சமாளிக்கும் என்று கூறினர்.

### கோல்ட்பேர்க்குக்கு யூதாண்ட் பாராட்டு

நியூயோர்க், ஏப்ரல் 27

ஐ. நா. சபையில் அமெரிக்காவின் பிரதான பிரதிநிதிப் பதவியிலிருந்து தமது ராஜினமாவைச் சமர்ப்பித்துள்ள திரு. கோல்ட்பேர்க்கை, ஐ. நா. பொதுக் காரியதரிசி யூதாண்ட் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

'திரு. கோல்ட் பேர்க், சிறந்த ராஜதந்திரத் திறமைவாய்ந்தவர் மட்டுமன்றி, மனிதாபிமானம் நிறைந்தவருமாவார்' என யூதாண்ட் கருத்துக் தெரிவித்தார்.

ஜோர்தானின்

## இஸ்ரேல் சுதந்திரதின அணிவகுப்பு பற்றிய புகார்

### ஐ. நா. பந்தோபஸ்து சபை அவசரமாகக் கூடுகிறது

நியூயோர்க், ஏப். 27

அடுத்த மாதம் 2-ந் திகதி ஜெருசலத்தில் இஸ்ரேல் நடத்தத் திட்டமிட்டுள்ள சுதந்திரதின இராணுவ அணிவகுப்பை ஆட்சேபித்து ஜோர்தான் செய்துள்ள புகாரை விசாரிக்க, ஐ. நா. பந்தோபஸ்து சபை, இன்றிரவு ஓர் அவசர கூட்டம் நடத்தவுள்ளது.

இவ் உத்தேச அணிவகுப்பு அப்பகுதியில் அமைதிக்குப் பங்கம் விளைக்குமென்பதுடன், 1949-ம் வருடத்தைய போர் ஓய்வு உடன்படிக்கையையும் மீறுவதாக ஜோர்தான், தனது புகாரில் தெரிவித்துள்ளது.

கேரள

## நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் பெரும் வெற்றி

திருவனந்தபுரம், ஏப். 27

கேரளநகரசபைத் தேர்தல்களில். காங்கிரஸ் குறிப்பிடத்தக்க வெற்றியீட்டியுள்ளது. இத்தேர்தல்கள், கடந்த வியாழனன்று நடைபெற்றன.

மொத்தம் 24 நகரசபைகளில், நேற்று நள்ளிரவுவரை 17 நகரசபைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. இவற்றில் 8 நகரசபைகளில், காங்கிரஸ், தனது சொந்தப்பலத்திலேயே அறுதியான பெரும்பான்மை பெற்றுள்ளது. மற்றும் 3 நகரசபைகளில், கேரள காங்கிரஸ் கூட்டுடன், பெரும்பான்மை பெற்றுள்ளது.

கோழிக்கூடுநகரசபையில், காங்கிரஸ் மொத்தம் 45 ஸ்தானங்களில் 25 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது பலத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை வெளியான மொத்தம் 409 முடிவுகளில், காங்கிரஸ் 160 ஸ்தானங்களைத் தனியாகவும், 64ஸ்தானங்களை, கேரள காங்கிரஸ் உட்டுடனும் பெற்றுள்ளது.

கேரள நகரசபைத் தேர்தல்களில் காங்கிரசுக்குக் கிடைத்துள்ள வெற்றிகள், அரசியற் பார்வையாளர்களுக்கு இங்கு பெரும் வியப்பை அளித்துள்ளன.

மிகுதியுள்ள 7 நகரசபைகளின் முடிவுகளும் இன்று வெளியாகும்.

## வியட்னும் சமாதானத்துக்கு தெ.வியட்னும் ஜனதிபதி தெரிவிக்கும் நிபந்தனைகள்

### 'ஒரு துண்டுப் பிரதேசத்தையும் விட்டுக்கொடுக்க முடியாது

### 'கூட்டாட்சியையும் ஏற்கோம்'

சைகோன், ஏப். 27

வியட்னும் சமாதானத்துக்கான நிபந்தனைகள் சிலவற்றைத் தென் வியட்னும் ஜனதிபதி திரு. வொன் தியூ அறிவித்துள்ளார்.

எந்த ஒரு சமாதான உடன்படிக்கையின் கீழும், தென் வியட்னும், அதன் பிரதேசத்தில் சிறு பகுதியைத் தானும் விட்டுக் கொடுக்காது என்றும், வியட்னுமில், சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டரசாங்கம் எதையும் நிறுவும் திட்டத்தைத் தென் வியட்னும் எதிர்க்குமென்றும், வட வியட்னுமிலிருந்து தொடர்ந்து உட்புகுதல் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கும் எந்தப் போர் நிறுத்த உடன்படிக்கையையும் தென் வியட்னும் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் ஜனதிபதி வொன் தியூ தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை எதுவும். வட வியட்னுமின் எல்லைகளை மூடுவதற்கு வழி வகுக்க வேண்டுமென வொன் தியூ வலியுறுத்தியுள்ளார்.

வட வியட்னுமிய, வியட்கொங் துருப்புகளிடமிருந்து தொடர்ந்து தாக்குதல்களைத் தென் வியட்னும் எதிர்பார்க்க வேண்டுமெனவும், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தென் வியட்னும் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமெனவும் வொன் தியூ மேலும் கூறியுள்ளார்.

பீகிங், ஏப். 27

இதற்கிடையில், வட வியட்னுமைத் தொடர்ந்து போரை நடத்துமாறு சீனு நெருக்கி வருகிறது எனப் பீகிங்கிலிருந்து கிடைக்கும் செய்திகள்தெரிவிக்கின்றன

பீகிங்குக்கு விஜயம் செய்துள்ள வட வியட்னும் தூது கோஷ்டியொன்றுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில், சீனத்தலைவர்கள் இதை வலியுறுத்தியதாகச் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உணர்ச்சி வேண்டும்"

அளவெட்டி, சனி

"இலக்கியத்திற்கு உணர்ச்சி, கற்பனை, கலைத்துவம் ஆகியன இன்றியமையாதன" என்று யாழ். இலக்கிய நண்பர் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவை யொட்டி குப்பிளான் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இலக்கிய விழாவில் திரு. சி. நடராசா பேசுகையில் கூறினார்.

கழகத்தலைவர் மாவை தி. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு வி. கிருஷ்ணசாமி பேசுகையில், "சமூகத்தின் சீர்கேடுகளையோ அல்லது பிரச்னைகளையோ இலக்கியத்தில் படம் பிடித்துக் காட்டினால் மட்டும் போதாது. அவற்றைத் தீர்ப்பதற்கான வழி வகைகளையும் எழுத்தாளர்கள் கூற முனையவேண்டும்." என்றார்.

திரு. மாவை தி. நித்தியானந்தன் தமது தலைமையுரையில் "சமூகத்திலே இலக்கிய எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட இளைஞர்கள் யாவரும் உழைக்க வேண்டும்" என்றார்.

மா பொன்னுத்துரையும் பேசினார். ஒரு கவியரங்கமும் இடம் பெற்றது.

---

## மிளகாய்த்தூளை வீசி அறுத்தார்

குரும்பசிட்டி, சனி

"என்னை தூசித்து மிளகாய்த்தூளை முகத்தில் எறிந்தார். அந்நேரம் பொன்னைவா கழுத்தில் இருந்த இருநூறு ரூபா பெறுமதியான சங்கிலியை அறுத்து எடுத்தார். பின்னர் இருவரும் அவ்விடத்திலிருந்து ஓடிவிட்டனர்"

மல்லாகம் மாஜிஸ்ரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் தனிப்பட்ட வழக்கொன்றைத் தாக்கல் செய்து சாட்சியமளிக்கையில் சங்கானையைச் சேர்ந்த யோகம்மா பென் அப்பையா (வயது 28) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிரிகள் இருவருக்கும் சம்மன்ஸ் அனுப்ப உத்தரவிட்டு நீதிபதி மேல் விசாரணையை அடுத்தமாதம் 25ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## மூலகாரணம் ஒற்றுமையின்மை

உடுவில், சனி

'இக்கால இளைஞர்கள் எதிர்காலத்தில் ஒப்பற்ற தலைவர்களாக விளங்கவேண்டுமானால் பாரதிகாட்டிய வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். அஞ்சாமையும் ஆற்றலுமே நல்வாழ்விற்கு வழிகாட்டும் கருவிகள். தமிழ் இனம் இன்று அடிமைப்பட்டு வாழ்வதற்கு மூலகாரணம் ஒற்றுமையின்மையே ஆதலால் குரோதங்களை மறந்து ஒன்றுபடுங்கள்'

வட்டுக்கோட்டை கிழக்கு இந்துவாலிபர் வளர்ச்சிக் கழகம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்துவைத்து தலைமையுரை நிகழ்த்திய திரு அ. துரைமைந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்!-

போஷகர் திரு. ஆ. வீரவாகு, தலைவர் திரு.வ சிவஞானம், உபதலைவர் திரு. அமிர்துரைராசா, செயலாளர் திரு. வ. வரணகுலசிங்கம், உப செயலாளர் திரு. க இராசலிங்கம், தனாதிகாரி திரு. வி. சண்முகநாதன், விளையாட்டுத் தலைவர் திரு. வ. கந்தசாமி.

மேலும் 5 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

# ஆலயப் பிரவேசம் பற்றி மனம் மாறவில்லையாம்

அளவெட்டி, சனி

"சைவ சமயத்தை அன்று தமிழ் அரசர்கள் கட்டிக்காத்து வளர்த்தபடியாலே நீதி. நெறி வழுவாது ஆட்சி செய்ய முடிந்தது. பிற சமயத்தவர்கள் இச் சமயத்தை அழிக்க முற்பட்ட போதும் அவ்வேளைகளில் தோன்றிய சமய குரவர்கள் அதைக் காப்பாற்றினார்கள். ஆனால் இன்று எமது சமயத்துக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களைப் போக்க எமது பாராளுமன்றப் பிரதிநிதிகளும் அரசாங்கமும் முன் வராதது கவலைக்குரிய விஷயமாகும்.

அரசாங்கம் சட்ட மூலம் ஆலயப் பிரவேசத்தை நிறைவேற்ற முற்பட்டால் எமது ஆலயங்களின் கதவுகள் பூட்டப்பட்டு எமது சமயத்தில் அக்கறையுள்ள பிரதிநிதிகளைத் தெரிவு செய்து இக் கொடிய சட்டத்தை மாற்றி அமைத்த பின்னரே எமது ஆலயக் கதவுகள் திறக்க ஏதுவாகும்."

இவ்வாறு அகில இலங்கை சைவ அனுட்டான சபைத் தலைவர் திரு த. சிவலிங்கம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகச் சுமுகமான நிலையை உருவாக்க பொலிஸ் அதிபரால் கூட்டப்பட்ட மகாநாட்டில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக இப்பகுதி சைவ மக்களின் அபிப்பிராயம் என்ன என்பதை அறியும்படி தெரிவு செய்யப்பட்ட குழுவின் இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் குழுத் தலைவர் பிரமஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

பல பகுதிகளிலிருந்து பெரும் தொகையான சைவர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் ஆலயப் பிரவேசத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

திரு வ. மாப்பாணர் பேசுகையில்: ஆகமங்கள் தான் கோவில்களுக்கு சட்டமாக அமைந்துள்ளது என்றும், சமூக ஏற்றத் தாழ்வு ஒழிப்புச் சட்டம் சைவ சமயத்தின் சுதந்திரத்தையே பாதிக்கிறது என்றும் கூறினார்.

பண்டிதர் மு. கந்தையா பேசுகையில் இன்று எழுந்துள்ள ஆலயப் பிரவேசம் சமுதாய விதியிலும், சமய விதியிலும், மெய்யாகக் காணப்படவில்லையென்றும் அவரவர் செய்த கர்மவினைகளின் பயனே எம்மை இறைவன் படைத்துவிட்டான் என்றும் கூறினார்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை உட்பட மற்றும் பலரும் தமது கருத்துக்களை தெரிவித்து உரையாற்றினர்.

இக் கூட்டத்துக்குத்தலைமை வகித்துப் பேசிய திரு. து. சண்முகநாதக்குருக்கள் இது சம்பந்தமாக சென்ற கூட்டத்திலும் பார்க்க யாருக்காவது மனம்மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என சபையோரைக் கேட்ட போது சபையோர் மனம் மாறவில்லை என்றனர். இதையடுத்து இன்னும் பல கூட்டங்கள் கூட்ட இருப்பதாக தலைவர் அறிவித்தார்.

---

# "2-ம் எதிரி அடித்தார்; 1-ம் எதிரி குத்தினர்"

## கரவெட்டி கொலை முயற்சி

### வழக்கில் கந்தையா சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"நானும் காயமடைந்த வல்லிபுரமும் ஒழுங்கையால் சென்றுகொண்டிருந்தோம். அப்பொழுது 2ம் எதிரி வந்து வல்லிபுரத்தை பொல்லால் அடித்தார். அதேசமயம் 1ம் எதிரி அவரைக் கத்தியால் குத்தினர்."

கரவெட்டி கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளித்த பி. கந்தையா மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் ஏச். டப்ளியூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில், கரவெட்டியில் 1965ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ந் தேதி தம்பு ஏரம்பமூர்த்தி, தம்பு தங்கராசா ஆகிய இருவரும், குமாரு வல்லிபுரத்தைக் கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. பி எஸ். சண்முகநாதன், புறக்டர் வி. ஏ. ஈ பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

கந்தையா தொடர்ந்து கூறியதாவது: "சம்பவம் நடந்த தினம், வல்லிபுரத்துடன் கரவெட்டிக்குப் போனேன். எதிரிகள் இருவரும் சகோதரர்கள். எதிரிகளின் வீட்டைக் கடந்து சென்றபோது "நில்லுங்கோடா" என்ற குரல் கேட்டது. எதிரிகள் ஓடிவந்தனர். 2ம் எதிரி [illegible] வல்லிபுரத்தை [illegible] 1ம் எதிரி கத்தியால் குத்தினர். 'ஏன்ரா அடிக்கிறீர்கள்' என்று கேட்டேன். எனக்கும் ஓங்கி அடித்தார். நான் ஓடிவிட்டேன்."

டாக்டர் சோமசுந்தரம், டாக்டர் வி. சிவரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

## கூப்பனுக்கு வழங்கும் அரிசி

### சட்டவிரோதமாக வைத்திருந்தாராம்

அளவெட்டி, சனி

சட்டவிரோதமாக வீட்டில் இருமூடை கூப்பன் அரிசி வைத்திருந்தவரைக் கைதுசெய்தனர் காங்கேசன்துறைப்பொலிசார்.

காங்கேசன்துறை காட்டடைப்பு வீதியைச் சேர்ந்த கந்தையா செல்லத்துரை என்பவருடைய வீட்டிலிருந்து 160 றாத்தல் நிறை கொண்ட இரு மூடைகூப்பனுக்கு வழங்கும் பச்சை அரிசியைக் காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த திரு. க. முருகேசு, திரு. வி. எம் மரியாம் பிள்ளை, பாலசூரியா உட்படசென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று கைப்பற்றியது.

பிரஸ்தாப நபரை கைது செய்து 200 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த பொலிசார் அடுத்தமாதம் [illegible] ஆஜராகும்படி உத்தரவிட்டனர்.

---

## கலந்துகொள்ள மாட்டார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்க் காங்கிரஸின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தின் மேதினக் கூட்டத்தில் உப சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் கலந்து கொள்ளமாட்டாரெனத் தெரியவருகிறது

பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு அமையவே அவர் ஊர்வலத்திலோ, மேதினக் கூட்டத்திலோ கலந்து கொள்ளமாட்டார்.

## வெங்காயச்செய்கை பற்றிப் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்டத்தில் வெங்காய உற்பத்தியைப் பெருக்கவும் பூச்சி புழுக்களிடமிருந்து வெங்காயப் பயிற்செய்கையைக் காப்பாற்றவும் யாழ்ப்பாண விவசாய இலாகா அதிபர் திரு. க. நா. ஜெயசீலன் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களுக்கும் சென்று வெங்காயப் பயிர்ச்செய்கையைப்பற்றி பிரச்சாரம் செய்வதிலீடுபட்டுள்ளார்,

அச்சுவேலி. இளைக்காடி, கோப்பாய்தெற்கு, பலாலி, பன்னாலை. சுன்னாகம், அச்சுவேலி, இணுவில், மீசாலை, மட்டுவில், கைதடி, துணுக்காய், புத்தூர், நீர்வேலி, கோப்பாய் வடக்கு ஆகிய இடங்களுக்கு இதுவரை இவர் சென்றுள்ளார்.

---

## வல்லைகூட்டுறவு வைத்தியசாலை

புன்னாலைக்கட்டுவன் சனி

வல்லைக் கூட்டுறவு வைத்தியசாலையின் பெரும்பகுதிக் கட்டிட வேலை முடிந்து கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து பிரபல டாக்டர்களை நியமிக்கும் பிரச்னை நிர்வாக சபையை எதிர் நோக்கியிருப்பதாகவும், இளைப்பாறிய பல தமிழ் டாக்டர்களின் சேவை இவ் வைத்தியசாலைக்குக் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தெரிவதாகவும் தெரிகிறது.

---

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, சனி

யாழ். இலக்கிய நண்பர் கழகத்தின் வருடாந்தத் தேர்தல் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: மாவை. தி. நித்தியானந்தன், துணைத்தலைவர்: ந. இராசேந்திரன், செயலாளர்: க மயில்வாகனன், துணைச்செயலாளர்: ஐ. சண்முகலிங்கம், பொருளாளர் வே. தேவதாசன், துணைப் பொருளாளர்: மா. பொன்னுத்துரை.

---

## வேலைநிறுத்தத்தில் குதித்தனர்

### உள்ளூராட்சி சிறு ஊழியர்

யாழ்ப்பாணம், சனி

உள்ளூராட்சி ஊழியர் சங்க சிறுஊழியர்கள்நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பைச் சேர்ந்த இரு சிறு ஊழியர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாகவே இவ்வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தனர்.

சாவகச்சேரியில்23 பேரும், புலோலியில் சிலரும். கட்டைவேலியில் 2 பேரும், பருத்தித்துறையில் சிலரும், நெல்லியடியில் சிலருமாக 32 பேர் நேற்று நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதுசம்பந்தமான நடவடிக்கைகளை உள்ளூராட்சி அதிகாரிகளும். பொலிஸ் பகுதியினரும் நேற்றுமாலை மேற்கொண்டனர். [கா. நி.]

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 28-4-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 கோணேஸ்வரம் தீர்த்தோற்சவம்—அஞ்சல், 8-30 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் வேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 கதம்பஇசை.

இரவு 6-15 வீணை — திருமதி சுந்தரலட்சுமி செல்வராசா, 6-45 பாவளம், 7-00 நேயர்விருப்பம், 7-30 நேயர்கடிதங்கள், 7-45 நாடகம் — 'அன்பின் முடிவு' 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-44 யூனெஸ்கோ உரைச்சித்திரம், 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்த இசை.

---

## மீனவர் பிரச்னை

காங்கேசன்துறை, சனி

கைத்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட மயிலிட்டி—குருநகர் மீனவர் பிரச்னையை ஆராயவுள்ள தனிநபர் கமிஷனரான திரு. எஸ். கிருஷ்ணதாசன் முன்னிலையில் விசாரணை மீண்டும் அடுத்தமாதம் 5ம், 6ம், 7ம் திகதிகளில் காங்கேசன்துறைப் பட்டினசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

---

## விலை உயர்ந்தது

இமையாணன், சனி

பெற்றோலிய கூட்டுஸ்தாபனத்தார் சில எண்ணை வகைகளின் விலையைக் கூட்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனால் முன்பு பத்து ரூபா ஐம்பது சதத்திற்கு விற்ற இஞ்சின் ஒயில் இப்பொழுது பதினைந்து ரூபாவுக்கும், ஒருரூபா ஐம்பதுசதம் விற்றஒருபோத்தல் இஞ்சின் ஒயில் ஒருரூபா தொண்ணூறு சதத்திற்கும் விற்கப்படுகிறதாம்.

---

மட்டக்களப்பில்

## "திறந்த வெளியரங்கு நிறுவ உதவுக"

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்புப் பகுதியில் பழம் பெருமைவாய்ந்த கலைகள் தகுந்தமண்டபமில்லாததால் மறைந்துகிடக்கின்றனவென்றும் பாடசாலை, மற்றும் மண்டபங்களுக்கு வாடகை செலுத்தி நிகழ்ச்சிகள் நடத்துவதில் இப்பகுதியில் ஊக்கம் காட்டப்படுவதில்லையெனவும், எனவேஇங்கு திறந்த வெளி அரங்கு ஒன்று அவசியம் நிறுவப்பட வேண்டுமென்மென்றும் கல்குடா எம் பி. திரு. கே. டபிள்யூ தேவநாயகம் கலாச்சார அமைச்சைக் கேட்டுள்ளார்.

நாட்டுக்கூத்து, கிராமியக்கவி, கோலாட்டம், கும்மி போன்ற கலைகள் மண்டப வசதியின்மை காரணமாக மறைந்து கிடப்பதாக எம். பி. சுட்டிக் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

**தமிழ் நாடகக் குழு,**
**இலங்கைக்**
**கலைக் கழகம்**

பாடசாலைகளுக்கான
நாடகப்போட்டி, 1968

இறுதித் திகதி
3-5-1968

விபரங்களுக்கு
செயலாளர்,
இலங்கைக் கலைக் கழகம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு7.
என்ற முகவரிக்கு எழுதவும்.
638



## மனேச்சர் தேவை

ஒதியமலை ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. கீழ்க்காணும் தகமையுள்ளவர்கள் 15-5-68-ந் திகதிக்கு முன் தலைவருக்கு, பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

(1) கல்வி:- ஜீ. சி. இ./ கூட்டுறவு பயிற்சிக் கலாசாலை முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
(2) பிணை:- ரொக்கம் ரூபா 1250/உம், ஆதனம் ரூபா 2500/உம்
(3) சம்பளம்:- கூட்டுறவுப் பயிற்சியுள்ளவருக்கு எல்லாம் உட்பட ரூபா 150/-. கூட்டுறவு பயிற்சி இல்லாதவருக்கு எல்லாம் உட்பட ரூபா 125/-

தலைவர்
ஒதியமலை ப. நோ. கூ.
நெடுங்கேணி, சங்கம்.
28-4-68. 639


## யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு
மூன்று கூப்பன்கள் கண்டெடுக்கப்பட்டு தபால் மூலம் 'ஈழநாடு' காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

வடபகுதிக்கு

# 20 புதிய பஸ்கள் அனுப்ப முகாமையாளர் கேட்டுள்ளாராம்

அராலி, சனி
நேரசூசிப்படி சேவையில் விடப்படாமையால், பிரயாணிகள் பஸ் தரிப்புகளில் பலமணிநேரம் காத்துநின்று கஷ்டப்படுவதாக அராலி பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ. ச. பிராந்திய முகாமையாளரை நேரில் கண்டு முறையிட்டுள்ளது. தம்மிடம் போதிய பஸ்கள் இயங்கும் நிலையில் இல்லாத காரணத்தாலும், பழுதடைந்த பஸ்களைத் திருத்திச் சேவையிலீடுபடுத்த உதிரிப் பாகங்கள் இல்லாமையாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக முகாமையாளர் சங்கத்தினருக்கு விளக்கினார்.

பழுதடைந்த பஸ்களில் சில ஒருவருடத்திற்கு மேலாகவும் அப்படியே கிடப்பதாகவும் அவர் சொன்னார். நிலைமையை மக்கள் அறிந்து இ. போ. ச. ஊழியர்மேல் வெறுப்புக் காட்டாமலிருக்க வேண்டுமெனவும் அண்மையில் இங்குவந்து விசாரணை நடத்திய இ. போ. ச. அதிகாரிகளுக்கு யாழ்ப்பாண பிராந்தியத்தில் நேரசூசிப்படி பஸ்களை ஓடச்செய்து பிரயாணிகளுக்கு வசதிசெய்வதற்கு குறைந்தது 20 புதிய பஸ்களாவது யாழ்ப்பாணத்திற்கு அனுப்பவேண்டுமென தாம் மேலிடத்தைக் கேட்டிருப்பதாகவும் முகாமையாளர் சங்கத்தினருக்குத் தெரிவித்தார்.

## கந்தபுராணப் படிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
மீசாலை வெள்ளமாவடிப் பிள்ளையார் கோவிலில் நாளை கந்தபுராணப் படிப்பு ஆரம்பித்து மூன்று மாதம் நடைபெற இருக்கிறது. வள்ளியம்மை திருக்கல்யாணத்துடன் விழா பூர்த்தியாகும்.

## மாட்டு சவாரிப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், சனி
பண்டத்தரிப்பு இளைஞர் விவசாயக் கழகத்தினரால் நேற்று பண்டத்தரிப்பில் நடத்தப்பட்ட மாட்டுச் சவாரிப்போட்டியில் ஐம்பதுக்கு மேற்பட்ட தனி மாடுகள் கலந்துகொண்டன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. வி. நவரத்தினசிங்கம் பரிசில்களை வழங்கினார்.

போட்டி முடிவுகள் வருமாறு:
மேற்பிரிவு: பொ. தெய்வேந்திரம், க. சுப்பிரமணியம், மா. தங்கராசா. கீழ்ப்பிரிவு: ச. விஜயரத்தினம், கி. இராசரத்தினம், க. தெய்வேந்திரம்.

## விதை உருளைக்கிழங்கு முற்பணம்கட்டிப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
எதிர்வரும் காலபோக உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால் தமக்குத் தேவையான உருளைக்கிழங்கின் தொகையை இம்மாத முடிவிற்குள் தமக்குத் தெரிவிக்கும்வண்ணம் யாழ்ப்பாண கமத்தொழில் இலாகா அதிபர் திரு. க. நா. ஜெயசீலன் யாழ்ப்பாண மாவட்ட உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையாளர்களைக் கேட்டுள்ளார்.

விதை உருளைக்கிழங்கு தேவைப்படும் விவசாயிகள் விதைக்கிழங்கின் விலையில் ஒருபகுதியை தமக்கு அண்மையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் முற்பணமாகக்கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஓர் அந்தர் விதை உருளைக்கிழங்கின் விலை பெட்டியுடன் ரூபா 67 சதம் 20 ஆக விவசாயிகளுக்கு விற்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. முற்பணம் கட்டிய விவசாயிகளுக்கு கார்த்திகை மாதம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விதைக்கிழங்கு வழங்கப்படவுள்ளது.
[வி. நி.]

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை

# "கொங்கிறீற் பகுதியை கொழும்புக்கு மாற்றுதீர்"

காங்கேசன்துறை. சனி
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 'கொங்கிறீற்' பகுதியைக் கொழும்புக்கு மாற்றுவதால் இங்கு சுமார் 300க்குமேற்பட்ட தொழிலாளர்கள் வேலையற்று தவிக்க வேண்டிவரும் இவ்வித சூழ்நிலை ஏற்படாமல் தவிர்க்க கொங்கிறீற் பகுதியை இடம் மாற்றும் முயற்சியை உடனடியாகக் கைவிட வேண்டும் எனக் கோரி காங்கேசன்துறை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவருக்கும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி. பொன்னம்பலத்திற்கும் அவசரக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 'கொங்கிறீற்' பகுதியில் செய்யப்படும் மின்சாரக் கம்பங்கள் பூச்சாடிகள், சிமெந்துக் குழாய்கள் இங்கு கூடிய அளவு விற்பனையாகாததால் இவ்வித இடமாற்ற வேலையை சிமெந்துக் கூட்டுத்தாபனம் எடுத்துவருகிறது. இதன்காரணமாகஇத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தற்காலிகதொழிலாளர்கள் பலரும் நிரந்தர தொழிலாளர்கள் சிலரும் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் எனவும் தெரிய வருகிறது. இப்பிரச்னை சம்பந்தமாக தொழிற்சங்கங்களும் கூடி ஆராய விருப்பதாகவும் தெரிகிறது.

## இன்றைய பலன்

சித்திரை மீ 16 உ
[28-4-68]
ஞாயிற்றுக் கிழமை

திதி- பிரதமை இரவு 10-59 மேல் துதியை.

நட்சத்திரம்- பரணி இரவு 9-57 மேல் கார்த்திகை.

ராகுகாலம்- 4-28—5-58

சுபநேரம்- 8-58—10-28

இன்று பிறந்தவர்களுக்கு— பொதுவாக நல்ல ஆண்டு. நீண்ட நாள் கனவு இவ்வாண்டு நனவாகலாம். அரசியல்வாதிகள் பொதுமக்களின் செல்வாக்கைப் பெறுவர். பல வழிகளில் பணம் வரினும் வரவின் மிஞ்சிய செலவுக்கு இடமுண்டு. உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

மேஷம்- புதிய தலையிடி, துணிமையில் நாட்டம்.
ரிஷபம்- வெள்ளிப் பணம் துள்ளும், வேண்டியது கிடைக்கும்.
மிதுனம்- இரும்புமனம் இருண்ட வாழ்வு.
கடகம்- வாகன சுகம், வாழ்விலும் நலம்.
சிம்மம்- புத்திரர் சுகம், புதியபாதை.
கன்னி- அரச பலம், ஆயுதபீடை.
துலாம்- அன்பு வலை. ஆனந்த நிலை.
விருச்சிகம்- ஆபத்து அருகில், அடக்கமே நன்று
தனுசு- அன்புக் கரம் அணைக்கும் அரசபோகம்.
மகரம்- புதிய கண்டு பிடிப்பு புகழ்மாலை.
கும்பம்- தாராள மனம் தனத்துடன் வாழ்வு.
மீனம்- உற்சாகம் தடைப்படும், உறக்க மிகுதி.

— சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## இரு ஆட்டங்களிலும் நல்லூர் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு
புத்தூர் கலைமகள் சனசமூக நிலையத்துக்கும் நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்துக்குமிடையே நடைபெற்ற காரசாரமான கரப்பந்தாட்ட மோதலில் அடுத்தடுத்து இரு ஆட்டங்களிலும் வெற்றியீட்டிய நல்லூர் தெற்குக் கோஷ்டியினர் புத்தூர்க் கோஷ்டியை அமோக வெற்றியீட்டியது.

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் புத்தூர் கோஷ்டியில் காப்டன் கோ. கௌதஸ்பமணி, இ. கிருஷ்ணபிள்ளை, வே. இளையகுட்டி, இ. தர்மராசா, வே. அப்புலிங்கம், வ. திருஞானசம்பந்தர், சி. அருந்தவம் ஆகியோரும், நல்லூர் தெற்குக் கோஷ்டியில் காப்டன் மா. நடராசா, கு. இராசதுரை, சு. முத்துராசா. எஸ். சிவரத்தினம், எஸ். உலகநாதன், இ. பரமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நல்லூர் தெற்குக்கோஷ்டி முதல் ஆட்டத்தில் 11—14 புள்ளிகளாலும், இரண்டாம் ஆட்டத்தில் 7—14 புள்ளிகளாலும் புத்தூர் கோஷ்டியைத் தோற்கடித்தது.
[வி நி]

## நன்கொடைப் பணம் கிடைத்தது

சுழிபுரம், சனி
வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அவ்வவ் நிலைய பாஸ் புத்தகத்தில் பணம்போடப்பட்டு பாஸ்புத்தகங்கள் நிலையத்தினருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை]
விஜிதா [மஸ்கேலியா]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)



**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-30 p. m.
Mickey Hargity & Jayne Mansfield
in
Loves of Hercules

**RAJAH**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Pre Poya & Poya 10-30 a m
BRAD HARIS as
Secret Agent 001
in
OUR MAN
IN JAMAICA

**REGAL** JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P.M.
Richard Attenbourogh & Diane Cilento
JET STORM



# "யாழ்ப்பாணக் கிளை"

**டபிள்யூ. எஸ். வெருண்லோ அன் சன்,**
(நீர்கொழும்பு)

திருமணச் சடங்குகள். மரணச் சடங்குகள் சம்பந்தமான சகல ஒழுங்குகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். புத்தம் புதிய பூக்கள், பூச்செண்டுகள், மலர் வளையங்கள் எம்மிடம் கிடைக்கும். பல ரகப் பிரேதப் பெட்டிகள் எம்மிடம் உண்டு. பிரேதம் கெடாதபடி பாதுகாத்துவைப்பதில் நவீன முறைகள் கையாளப்படும் பிரேதம் கொண்டு செல்லும் நவீன வண்டிகள் உண்டு. ஞாபகச் சின்னங்கள் சிறந்த வகையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

**இரவு பகல் எந்நேரமும் சேவை அளிக்கப்படும்.**

சலார் சகாயம்,
84, பாங்ஷால் வீதி, சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனும் மனைவியும் நஞ்சருந்தி தற்கொலை

## ராகமையில் நடந்த சம்பவம்

கொழும்பு, சனி

சிலமாதங்களுக்கு முன்னர் தான் காதலித்து கலியாணம் செய்துகொண்ட தமிழ் இளைஞர் ஒருவரும் சிங்கள யுவதி ஒருவரும் நச்சுமருந்து அருந்தி உயிர்நீத்த பரிதாப சம்பவம் நேற்றுமுன்தினம் ராகமையில் நடந்தது.

ஹெந்தலை தொழுநோயாளர் ஆஸ்பத்திரியில் அப்போதிக்கரிய கப் பணியாற்றிய 34 வயதானகே. ஜே. சேசிநாதனும், அதே ஆஸ்பத்திரியில் சேவைசெய்த 32 வயதான மல்லிகா கருணாவதி என்றமாதியும், திருமணம்செய்து ராகமையில் வசித்து வந்தனர். இவர்கள் இருவரும் ஒருவர்பின் ஒருவராக நஞ்சு அருந்தி தற்கொலை செய்துகொண்டனர்.

அலுத்கோரளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டி. வை. ரத்துனு விசாரணைநடத்தினுர் டாக்டர் எல். டபிள்யு.பெரேரா பிரேத பரிசோதனை செய்தார்.

டால்லி டேரியன் என்ற பெண்சாட்சியமளிக்கையில், கடந்த இருமாதங்களாக, சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்த்துவந்தார்களென்றும், சம்பவதினம், தான் சென்றபோது அப்போதிக்கரி அழுதுகொண்டு நின்ருரென்றும், அவர்கொடுத்த சவுக்காரத்தண்ணீரை, மனைவி குடிக்கவில்லையென்றும், இதைத் தொடர்ந்து கிளாசிலிருந்தவற்றை அவரும் குடித்தாரென்றும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் வழியில் இருவரும் மரணமானுர்களென்றும் கூறினுர்.

மரண விசாரணையின் பின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் சந்யாசினிகள்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்புக்கு வந்த கல்கத்தா ராமகிருஷ்ண சாரதா மிஷன் சந்நியாசினிகளான ஸ்ரீமத் பிரவிராஜிகா முக்திபிராணு, ஸ்ரீமத் பிரவிராஜிகா ஆத்மபிராணு இருவருக்கும் இங்கு கிராமங்கள்தோறும் வரவேற்பளிக்கப்பட்டது. அம்பாறை விமான நிலையத்தில் வந்திறங்கிய சுவாமிகளை மட்டக்களப்பு ராமகிருஷ்ணமிஷனைச்சேர்ந்தவர்களும் அம்பாறைமக்கள் சார்பில் அம்பாறை உப அரசாங்க அதிபரும் வரவேற்றனர். காரைதீவு, கல்முனை, பாண்டிப்பு, பெரியகல்லாறு, களுவாஞ்சிக்குடி மற்றும்பல இடங்களுக்கும் சுவாமிகள் இருவரும் விஜயம் செய்தனர்.

—

## 'கசிப்பு'

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த அளம்பில், செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் ஆகிய கிராமங்களில் மதுவகையில் ஒன்ருன 'கசிப்பு' என்னும் குடிவகை ஏராளமாக மக்கள் மத்தியில் விற்பனைசெய்யப்படுகிற தாம்

—

# 'உயிர்இருக்கும் வரை தமிழ்மொழியைகைவிடோம்'

## சாவகச்சேரி எம். பி.க்கு சிவலோகநாதன் எழுதிய கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"எங்கள் உயிர் இருக்கும் வரைக்கும் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் கைவிடமாட்டோம். மொழிப்பிரச்னையை சமூகமாகத்தீர்த்து வைப்பதற்கான நல்லநடவடிக்கையை எடுப்பீர்களென எதிர்பார்க்கிறேன்.

ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு விவசாயப்படையிலிருந்தபோது மர்ம மரணமடைந்த சிவலோகநாதன் கடைசியாக கடந்த மாதம் 17-ம் தேதி சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்திற்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டதாவது:-

உங்கள் உதவியினுல் விவசாயப்படையில் வந்திருக்கிறேன். இங்கு வவனியா, சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, கொக்குவில், இன்னும் பல ஊர்களிலிருந்து வந்திருக்கிருர்கள்.

நாங்கள், உயிர் இருக்கும் வரை, தமிழ் மொழியை பண்பாட்டை இழக்கவோ மாட்டோம். எமது தமிழ் பண்பாட்டைத் துலக்கிக் கொண்டே இருப்போம். எனவே இந்த மொழிப் பிரச்னைக்கு சமூகமாக தீர்வு காண சிறந்தவழியைக்கையாள காணவேண்டும். தாங்கள் அதைச்செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

# காங்கேசன் துறைமுகத்தில் சரக்குக் கப்பல்கள்

காங்கேசன்துறை, சனி

கொழும்பு, திருகோணமலை, காலி ஆகிய துறைமுகங்களில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கப்பல்கள் வர ஆரம்பித்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை எம். வி. 'மதரூஸ் மாறு' என்னும் கப்பல்சுமார 1,200 தொன் பெட்டிச் சாமான்களுடன் வந்துசேர்ந்துள்ளது. இக்கப்பலில் காரும், வேறு பல மோட்டார் உதிரிப் பாகங்களும், உரமும் இறக்குமதிக்கு வந்துள்ளதாக அறியப்படுகிறது.

மேலும் சுமார் 10,200 தொன் பாங்கொக் அரிசியுடன் எம். வி. 'ஆஸ்ரர்' என்னும் கப்பல் இன்று காங்கேசன்துறை துறைமுகம் வந்துசேரவிருப்பதாகவும், இக்கப்பலிருந்து இறக்குமதி வேலைகளை யாழ். மாவட்ட கூட்டுறவு துறைமுக தொழிலாளர் சமாசத்தைச் சேர்ந்த சுமார் 800 தொழிலாளர்களும் 100 ரலி குமாஸ்தாக்களும் மேற்கொள்வர்.

# அரசாங்க ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுவர். இவ் விதியில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தின்படி இலங்கை முழுவதிலும் ஒரேநேரத்தில் இம்மசோதா அமுல் நடாத்தப்படும் அடையாள அட்டை இல்லாதோர் நாடற்றவர்களாகவே கருதப்படக் கூடிய அபாயத்தையும் இம்மசோதாவில் செய்யப்பட்டுள்ள திருத்தம் ஓரளவு போக்கும் என நம்புகிறேன்.

தமிழினத்திற்கும் எமது கட்சியின் கொள்கைக்கும் தேசிய அரசாங்கம் இடையூருக இருக்குமாகில் தமிழ்க் காங்கிரஸ் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடும். அப்போது எனது உப சபாநாயகர் பதவியையும் உதறித் தள்ளிவிடுவேன். இதனை நான் பல தடவை வலியுறுத்தி வந்துள்ளேன்."

—

## கலவரத்தை......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் அப்பகுதியில் கலவரங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இரு சமூகத்தவர்களையும் கொண்ட சமாதான சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இரு வாரங்களுக்கு ஒரு தடவை இவர்களைப் பொலிசார் சந்தித்து நிலைமைபற்றி ஆராய்வார்கள். சமாதானத்திற்கான வழிவகைகள் பற்றி இச்சபை தெரிவிக்கும்.

# திருமுருகன்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ட்டி அமையாது.

சென்ற ஆண்டில் கந்தப் புராணத்துக்கு விழாஎடுத்த இந்துமாணவர் மன்றம், கண்மூடி விழிப்பதற்கு முன் இந்த ஆண்டில் கந்தப் புராண நாயகனை திருமுருகனுக்குக் கோயிலமைத்து, மாவிட்டபுரத்திலிருந்து முத்துக்குமாரசுவாமியைப பவனிவரச் செய்வது, வருங்காலத்தில் நம்பிக்கையை வரச் செய்வதாயிருக்கின்றது.

சென்ற நூற்றுண்டில் தாய்நாட்டில், தமிழும் சமயமும் துயில்கூடுகின்ற சமயத்திலே, யாழ்ப்பாணந் துயிலெடைபாடித் துயிலுணர்த்தியது. இதனைத் தொடர்ந்து இனி வருங்காலத்தில், தாய்நாடுட்பட உலகமே உய்ய, கற்றதனாலாய பயன் இது என்பதைச் சுட்டிக்காட்டி, ஈழத்துப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் வழிகாட்டியாயமைவதாக திருமுருகன்திருவருள் பெருகுக. திருப்பவனி எவர் உள்ளத்திலும் என்றும் நின்று நிலவுக.

—

## எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கரவெட்டி கொலை முயற்சி வழக்கில், எதிரிகள் இருவரும் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர். அசைஸ் விசாரணை மே மாதம் 2-ம் திகதிவரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

## ஓசிப்பயணத்துக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சி கடுகதி பஸ்ஸில் பிரயாணம் செய்த ஒருவர் டிக்கெற் இன்றிப் பிரயாணம் செய்ததாக டிக்கெற் பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. தண்டப்பணத்தினை அவர் செலுத்தாமையால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று அங்கு தண்டப்பணம் அறவிடப்பட்டதாகத் தெரிகிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பேராசிரியரே இவ்விதக் கருத்தை எழுதியிருந்ததை நினைவுகூரும் போது, பிறரைக் குறை கூறமுடியுமா?

வேறு சமயத்தைப் பற்றி இப்படி யாரும் கூறினுல் என்னென்ன விபரீதங்கள் நடக்கும்! ஆனுல் இந்துக்கள்தானே. யாரும் எதுவும் சொல்லலாம். கேள்விமுறை ஏது?

ஃ ஃ

மாவிட்டபுரம் கோவிலிலிருந்து வள்ளி தேவானை சமேதமாக முருகன் விக்கிரகத்தை நாளை யாழ்ப்பாணம் வழியாகப் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்கிறுர்கள்.

வழியிலே ஆங்காங்கே மண்டபப்படிகள், பஜனைகள் முதலியன நடக்க விசேஷ ஏற்பாடுகள் செய்துள்ளதை ஒரு துண்டுப்பிரசுரத்தில் பார்த்தேன். சீக்கிரத்தில் அங்கு கும்பாபிஷேகம் நடக்கப்போகின்றதாம்.

இரு மாணவர்கள் இவ் விஷயமாக எடுக்கும் பெருமுயற்சியைக் காண மிக மகிழ்ச்சியாகவும், பெருமையாகவுமிருந்தது. பல்கலைக்கழகத்திலே தம் மாணவ மாணவிகள் தெய்வ நம்பிக்கையை வளர்த்து அறவழியில் செல்வதாயின், ஈழத்தின் எதிர்காலம் மிக மேலானதாக இருக்குமல்லவா?

ஃ ஃ

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவிலில் 24 நாட்களாக ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான், கந்தபுராணக் கதாப்பிரசங்கம் செய்து நேற்று முன்தினம் பூர்த்திவிழா சிறப்பாக நடைபெற்றது. தம்பிரான் அவர்கள் ரத்தோட்டைக் கோயிலில் 15 நாள் பாரதம் பற்றிக் கதாப்பிரசங்கம் செய்கிருர். பின்னர் அவர் மதுரைக்குச் செல்லுவதாகத் தெரிகின்றது.

ஃ ஃ

நங் கடம்பனைப்
பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்
கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும்
தாங்குதல்
என்கடன் பணிசெய்து
கிடப்பதே.

—அப்பர் சுவாமிகள்.

# ம. பி. மந்திரிசபையிலிருந்து ஜனசங் மந்திரிகள் ராஜினுமா

## ரண் ஒவ் கச் தீர்ப்பு எதிர்ப்பு இயக்கத்தில் பங்குபற்றுவர்

போபால், ஏப்ரல் 27

ரண் ஒவ் கச் தீர்ப்பை எதிர்த்து நடைபெறும் இயக்கத்தில் பங்குபற்றுவதற்கென, தமது கட்சித் தலைமைப்பீடத்தின் உத்தரவை ஏற்றுக்கொண்டு மத்தியப் பிரதேச மந்திரிசபையில் அங்கம் வகிக்கும் ஏழு ஜனசங் மந்திரிகளும் தமது ராஜினுமாவைச் சமர்ப்பித்துள்ளனர்.

இதற்கிடையில் ரண் ஒவ் கச் தீர்ப்பை எதிர்த்து, அங்கு தடுக்கப்பட்ட பகுதிக்குள் பிரவேசிக்க முயன்றபோது கைதுசெய்யப்பட்டவர்களில், 126 பேருக்கு நேற்று அபராதத்துடன், 14 நாட்கள் சாதாரணச் சிறை விதிக்கப்பட்டது.

—

## மர்ம கல்வீச்சு

சங்கானை, சனி

சித்தங்கேணியில் ஒருவரின் வீட்டில் மர்மமாகக் கல்லெறியப்படுகிறதாம். அத்துடன் இவ்வீட்டிலுள்ள பாவனைப் பொருட்கள் திடீரெனக் காணுமல் போவதாகவும் சிறிது காலத்தின்பின்னர் மீண்டும் அவ்வீட்டின் இன்னோர் பகுதியில் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

எந்த நேரத்திலும் நடைபெறும் இவ்விசித்திரக் கல்லெறிவை ஏராளமான மக்கள் சென்று பார்க்கின்றனர். இவ்வித்தையின் காரணமறிய பலர் முனைந்துள்ளனர்.

## இலவச படக்காட்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் ஆதரவில் இன்று மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் மதுரைக்கோவில், மாமல்லபுரம், பரதநாட்டியம் மற்றும் இந்திய செய்திப்படத்துறை திரைப் படங்கள் சில இலவசமாக காண்பிக்கப்படவிருக்கின்றன.

—

## இந்து இளைஞர் சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னுகத்தில் இந்துஇளைஞர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது சுன்னுகம்மயிலணி வித்தியாசாலையில் நடந்த இக்கூட்டத்தில் பின்வருவோர் சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. அம்பலவாணர், உபதலைவர்கள்: திருவாளர்கள் ச, அம்பிகைபாகன் சி. இராசா, கு முத்துக்குமாரசாமி, வி. சிவசுப்பிரமணியம். அ தம்பியப்பா, வெ முருகேசு. இணைச்செயலாளர்கள் திருவாளர்கள்; வைத்திலிங்கம், ஆ. மார்க்கண்டன். இணைத்தனுதிகாரிகள்: திருவாளர்கள் கா. வல்லிபுரம், ச. கந்தப்பு.

17 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும்தெரிவு செய்யப்பட்டது.

## மரண அறிவித்தல்

கொழும்புத்துறை தவயோகி யோகசுவாமி அவர்களின் சீடனும் (சிவதொண்டன்) கச்சேரி, நல்லூர் ரோட், மூத்தவிநாயகர் கோவிலடியில் இருந்தவருமாகிய வேலுப்பிள்ளைசெல்லையா சுவாமியார் அவர்கள் 21-4-68 ஞாயிற்றுக்கிழமை இறைவன் திருவடிநிழலைச் சேர்ந்துவிட்டனர். அவர்களின் கருமக்கிரியைகள் அடுத்த நாள் இனிது நடைபெற்றன. — ச. பழனிச்சாமி. 1452


## நெல் விற்பனைக்கு

தொகையான பூநகரி H 4, மொட்டைக் கறுப்பன் நெல் குஞ்சுப்பரந்தனில் விற்பனைக்குண்டு. தேவையானோர் தொகை, இனம், விலை குறித்து விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 640 C/o ஈழநாடு லிமிட்டெட். 640


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதியிலுள்ள [illegible] அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org